# ???? ?????????? ?????????? ?????? ????????????



நமது ஈழநாடு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இம்முறை தமிழர்தாயகத்தின் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளான முன்னாள் போராளிகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பகள் என தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

தற்போதைய கொரோனா தொற்று காலநிலையில் அவர்களின் கஷ்ட நிலைக்கு கரம்கொடுக்கும் வகையில் பிரித்தானியாவில் வசிக்கும் மனித உரிமை செயற்பாட்டாளர் கீத் குலசேகரம் அவர்களின் ஏற்பாட்டில் தன்னார்வ கொடையாளி ராகிஷனின் நிதிப்பங்களிப்பில் மேற்படி குடும்பங்களிற்கான அத்தியவசிய உணவும்பொருட்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாற்றுத்திறனாளிகள் மாதர் அமைப்பின் உதவியுடன் தேர்தெடுக்கப்பட்ட குடும்பங்களிற்கு இவ்வுதவித்திட்டம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









**மாற்றுத்திறனாளிகள் மாதர் அமைப்பு**
**විශේෂ හැකියාවන් සහිත පුද්ගලයින්ගේ කාන්තා සංවිධානය**
**Women's Organization Working on Disability**

MULLAITIVU DISTICK
முல்லைத்தீவு மாவட்டம்

RE.No. L-169012 RE. Date-30-02-2018

தலைவர்
மாற்றுத்திறனாளிகள் மாதர் அமைப்பு
முல்லைத்தீவு
மாவட்டம்
27/08/2021

சிவலிங்கம் - ரகிஷன்
அவர்கட்கு
இல 229/ [illegible]
[illegible]
வவுனியா

உலர் உணவுப்பொதி வழங்கியமைக்கு நன்றி கூறல் தொடர்பானது

மேற்படி விடயம் தொடர்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல மாற்றுத்திறனாளிகள் அன்றாட உணவுத் தேவைக்காக கொரோனா (கோவிட்-19) ஊரடங்கு அமுலில் இருக்கும் காலங்களில் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வாழ்கின்றனர். அவர்களின் தேவை அறிந்து உணவுப்பொதியினை வழங்கி உதவிய உங்களுக்கு எமது அமைப்பின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். நடந்த 27/08/2021 அன்று திடீரென பெண் மாற்றுத்திறனாளிகள் உட்பட 20 பேருக்கு உதவி செய்து அவர்களின் கஷ்டத்தினை ஓரளவு தீர்த்துள்ளீர்கள். உண்மையிலேயே மிகவும் பிரயோசனமான உணவுப்பொதியினை தேவையான நேரத்தில் தந்துதவிய உங்களை மனமார வாழ்த்துகின்றேன்.

மேலும் எமது மாவட்டத்தில் உள்ள ஏனைய மாற்றுத்திறனாளிகளுக்கு உதவும் வண்ணம் மிகவும் தாழ்மையாக கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

S. Sivakala

President
WOWD
Mullaitivu

# ??????????????? ??????? ??????????????
# ????????? ?????? ???????



பூநகரி – சங்குப்பிட்டி கடலில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று மிதந்துவந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

பொதுமக்கள் சிலர் இது குறித்த தகவலை பொலிஸாருக்கு வழங்கியதையடுத்து பூநகரி, சாவகச்சேரி பொலிஸார் மற்றும் கடற்படையினர் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டுள்ளனர்.

மீன்பிடி வலைகள் சுற்றிய நிலையில் காணப்படும் குறித்த சடலத்தை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

# ???????????????? ??????? ???????? ??????
# ?????? ??????????????? ?????????



மட்டக்களப்பில் டெல்டா மற்றும் அல்பா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த 24 மணித்தியாலயத்தில் கொரோனாவினால் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் புதிதாக 274 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்று (சனிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே வைத்தியர் நா.மயூரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, கடந்த 24 மணித்தியாலயத்தில் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேரும் களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், செங்கலடி, வெல்லாவெளி, வாழைச்சேனை, வவுணதீவு, ஆரையம்பதி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் தலா ஒருவர் வீதம் 7 பேர் உட்பட 10 பேர் உயிரிழந்துள்ளதையடுத்து மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 211 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை மாவட்டத்தில் எழுமாறாக எடுக்கப்பட்ட 3 பேரின் பீ.சி.ஆர்.பரிசோதனையின் மாதிரிகள், கொழும்பு ஜெயவர்தன பல்கலைக்கழகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட மாதிரிகளில் இருவருக்கு டெல்டா வைரஸும் ஒருவருக்கு அல்பா வைரஸும் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அதாவது, மாவட்டத்தில் டெல்டா வைரஸ் தொற்று பரவியிருக்கின்றதுடன் ஒருவாரத்தில் ஆயிரத்து 982 கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் நாளாந்தம் 300 தொற்றாளர்கள் கண்டறியப்படுவதுடன் 5 க்கும் மேற்பட்டோர் மரணமடைந்து வருகின்றனர்.

ஆகவே பொதுமக்கள் வீட்டை விட்டு வெளியே வருவதனை தவிர்த்தால்தான் வைரஸ் தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.